செ.வெ.எண்: 14 நாள்: 08.02.2018

# பத்திரிக்கைச் செய்தி

புதுக்கோட்டை மாவட்டத்திதல் கால்நடை பராமரிப்புத் துறையில் காலியாக உள்ள 79 கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவிக்கு தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இந்த பணிக்கு விண்ணப்பிக்க விருப்பம் உள்ளவர்கள் 10 ஆம் வகுப்பு படித்திருக்க வேண்டும் (தேர்ச்சி / தோல்வி) கால்நடைகளை கையாளவும், மிதிவண்டி ஓட்டவும் தெரிந்திருக்க வேண்டும்

பெண்கள், ஆதவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள், முன்னாள் இராணுவத்தினர் ஆகியயோரின் இட ஒதுக்கீடு மற்றும் விகிதாச்சார அடிப்படையில் நியமிக்கப்பட உள்ளனர். மேற்கண்ட பதவிக்கும் விண்ணப்பிக்கும் விண்ணப்பத்தாரர் குறைந்தப்பட்ச வயது 18, அதிகபட்ச வயதாக அருந்ததியினர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் வகுப்பினர்களுக்கு வயது வரம்பு 35 ஆகும்.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்) வயது வரம்பு 32 ஆகும். பொதுப்பினவினருக்கு வயது வரம்பு 30 ஆகும். ஆதரவற்ற விதவைகள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு விதிமுறைகளின்படி வயது வரம்பில் தளர்வு வழங்கப்படும்.

09.02.2018 முதல் விண்ணப்பங்களை www.pudukkottai.nic.in என்ற இணையதளத்தில் கட்டணமின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பத்தாரர்கள் விண்ணப்பத்துடன் ரூ.5/- மதிப்புள்ள அஞ்சல் வில்லை ஒட்டிய விண்ணப்பதாரரின் தற்போதைய இருப்பிட முழு முகவரியுடன் கூடிய அஞ்சல் உறையை (Envelope) இணைத்து அனுப்ப வேண்டும்.

பூர்த்தி செய்த விண்ணப்பங்களை மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை, நகர்பிரிவு பால்பண்ணை வளாகம், புதுக்கோட்டை - 622 005 என்ற முகவரிக்கு 20.02.2018 அன்று மாலை 5.45 மணிக்குள் தபால் மூலமாகவோ நேரிலோ ஒப்படைக்க வேண்டும்.

இப்பதவிக்கு நேர்காணல் அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்படுவார்கள்.

நேர்காணலில் அதிக மதிப்பெண் பெறும் விண்ணப்பத்தாரர்கள் இனசுழற்சி அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**